**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

| | |
|---|---|
| Sessions Case No | SC.No.19/2023 |
| Primary Register Case No; | |
| Deposition of Witness for | Prosecution PW – 6 |
| | Defence |
| | Court |
| Name | ராஜிவ்ராய் மருத்துவர் |
| Father's Name | **நீலகண்டராய்** |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Regligion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 24th day of July 2026.

Signature of Witness

Name of the Interpreter: Tmt. V.Mohana, Head Clerk

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 24th day of July 2026.

Signature of Interpreter

**முதல் விசாரணை**

நான் தற்போது பனிமலர் மருத்வமனையில் RMOஆக பணிசெய்து வருகிறேன். கடந்த 01.05.2012 அன்று இரவு 10.30 மணிக்கு திரு.காளிதாஸ் த.பெ கோதண்டம் என்பவர் தாமாகவே சிகிச்சைக்கு வந்தார். அவர் என்னிடம் தெரிந்த இரு நபர்கள் TVS Axcel India என்ற இடத்திற்கு அருகில் அன்று இரவு சுமார் 10.15 மணியளவில் இரும்பு கம்பியால் தலையில் அடித்ததாக சொன்னார். அவரை நான் பரிசோதித்ததில்

1.அவரது தலையின் பின்பக்கத்தில் இரத்தம் கசிந்த நிலையில் வெட்டு காயங்களுடன் காணப்பட்டது. தலையில் காணப்பட்ட 6x2x2Cm அளவில் இருந்தது.

2. மேல் உதட்டிலும் கீழ் உதட்டிலும் சிறு சிறு அளவில் வெட்டு காயம் காணப்பட்டது.

3. கீழ் உதட்டிற்கு உள்ளே பார்த்தபோது உள்பக்கமாக தாடை எலும்பு வெளியே தெரிந்தது மற்றும் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது.

அவருக்கு முதலுதவி செய்து மேல்சிகிச்சைக்காக சென்னை பல்மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேடு Ex.P5 மற்றும் அவருக்கு ஏற்பட்டிருந்த காயம் கொடுங்காயம் என்று சான்றளித்துள்ளேன். அந்த சான்று Ex.P6 ஆகும்.

அதே நாளில் அதே நேரத்தில் திரு.வரதன் த.பெ முருகன் வயது 38 என்பவர் அதே சம்பவத்தில் அதே இடத்தில் அதே இரும்பு கம்பியால் அதே நபர்களால் தாக்கப்பட்டதாக கூறினார். அவரை பரிசோதித்து பார்த்ததில் இடது முன் கையில் சிராய்பு காயம் காணப்பட்டது. இவருக்கு Xray எடுக்கப்பட்டது. மேலும், இவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார்.

Xrayவில் எலும்பு முறிவு காணப்படவில்லை. அவருக்கு ஏற்பட்ட சிராய்ப்பு காயத்திற்கு சிகிச்சை அளித்தேன். நான் பதிவு செயத் விபத்து பதிவேடு Ex.P7 ஆகும். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்றளித்துள்ளேன் அந்த காய சான்று Ex.P8ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை**

சிகிச்சைக்கு வந்த இரண்டு நபர்களும் நல்ல நிலையில் இருந்தார்களா அல்லது மயங்கிய நிலையில் இருந்தார்களா என்றால் நல்ல நிலையில்தான் இருந்தார்கள். இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக சென்று ஒரு தடுப்பு சுவரில் மோதும்போது தடுமாறி கீழே விழும்போது மேலே குறிப்பிட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் வாய்ப்பு உண்டு.

Sd/– J.மோகனா,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.